# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1569/2022 P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஆரோக்கியசாமி | த-பெ | அருளானந்து |
| ஊர்: | : | புத்தூர் | | |
| வயது: | : | 65/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கூட்டுறவு அச்சகம் ஓய்வு | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **28.04.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் புத்தூரில் வசித்து கூட்டுறவு அச்சகத்தில் பணி செய்து ஓய்வில் உள்ளேன். 26.05.2022 அன்று நான் மானாமதுரையில் இருந்தேன். எனது பெரிய மகன் லூர்து ஆரோகிய அன்பு ராஜா என்பவர் எனக்கு மாலை 5.30 மணியளவில் என்னிடம் செல் போனில் தொடர்பு கொண்டு எனது இரண்டாவது மகன் ஜூனியர் ராஜா என்பவர் தன்னுடைய Splender இருசக்கர வாகனத்தில் பெரியசாமி என்பவருடன் வேலை முடித்து விட்டு திருச்சி புறவழிசாலை ராஜா வித்தியா விகாஸ் பள்ளி அருகில் சென்று கொண்டிருந்த போது தேவக்கோட்டையில் இருந்து திருச்சி நோக்கி சென்ற கார் ஒன்று என்னுடைய மகன் சென்றஇருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், இந்த விபத்தில் எனது மகனுக்கு தலை, வலது முழங்கால், வலது கை, தலை பின்புறம் ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டதாகவும், பெரியசாமி என்பவருக்கு தலையில் மற்றும் வலது கால் ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸில் காரைக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாக தெரிந்து கொண்டேன். எனது பெரிய மகன் மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சென்று சேர்த்ததாக சொன்னார். அங்கு சென்று நான் பார்த்த போது எனது மகன் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டார்.

பின்னர் மேற்படி விபத்து ஏற்படுத்திய காரை ஓட்டியவர் சேலத்தை சேர்ந்த முரளி என்பவர் என்று தெரிந்து கொண்டேன். விபத்து சம்மந்தமாக சம்பவ சமயத்தில் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி விவரங்களை நான் சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். மேற்படி சொன்ன விவரங்களை அனைத்தும் போலீசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய நபர் கொல்லிமலை கிராமத்தை செர்ந்தவர் என்று போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்த ஜூனியர் ராஜாவுக்கு மது அருந்தும் பழக்கும் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. இருசக்கர வாகனத்தில் சென்ற 2 நபர்களும் மது அருந்தி வாகனம் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார்கள் என்ற விவரம் தெரிந்தும் தற்போது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.29 12:16:42 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
C.C. No.1569/2022 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சகாய மேரி | க-பெ | ஆரோக்கிய சாமி |
| ஊர்: | : | கூத்தலூர் | | |
| வயது: | : | 65/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம். | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.04.2026

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் கூத்தலூரில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். 26.05.2022 அன்று நான் ஊரில் இருந்தேன். அப்போது எங்கள் ஊரை சேர்ந்த பஞ்சாயத்து தலைவர் நபர் ஒருவர் மூலமாக எனக்கு தொடர்பு கொண்டு எனக்கு மாலை 5.00 மணியளவில் எனது இரண்டாவது மகன் ஜுனியர் ராஜா என்பவர் தன்னுடைய Splender இருசக்கர வாகனத்தில் பெரியசாமி என்பவருடன் வேலை முடித்து விட்டு திருச்சி புறவழிசாலை ராஜா வித்தியா விகாஸ் பள்ளி அருகில் சென்று கொண்டிருந்த போது தேவக்கோட்டையில் இருந்து திருச்சி நோக்கி சென்ற கார் ஒன்று என்னுடைய மகன் சென்றஇருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், இந்த விபத்தில் எனது மகனுக்கு தலை, வலது முழங்கால், வலது கை, தலை பின்புறம் ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டதாகவும், பெரியசாமி என்பவருக்கு தலையில் மற்றும் வலது கால் ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸில் காரைக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாக தெரிந்து கொண்டேன். நான் அங்கு சென்று பார்த்தேன். அப்போது அவருக்கு தலை மற்றும் கால் ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டிந்தது. அவர் மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டார்.

பின்னர் மேற்படி விபத்து ஏற்படுத்திய காரை ஓட்டியவர் சேலத்தை சேர்ந்த முரளி என்பவர் என்று தெரிந்து கொண்டேன். விபத்து சம்மந்தமாக சம்பவ சமயத்தில் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி விவரங்களை நான் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். மேற்படி சொன்ன விவரங்களை அனைத்தும் போலீசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய நபர் கொல்லிமலை கிராமத்தை செர்ந்தவர் என்று போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்த ஜூனியர் ராஜாவுக்கு மது அருந்தும் பழக்கும் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. இருசக்கர வாகனத்தில் சென்ற 2 நபர்களும் மது அருந்தி வாகனம் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார்கள் என்ற விவரம் தெரிந்தும் தற்போது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.29 12:16:48 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1569/2022 P.W.6

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ரோஸி அல்பா | க-பெ | ஜூனியர் ராஜ் |
| ஊர்: | : | கூத்தலூர் | | |
| வயது: | : | 28/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம். | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **28.04.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் கூத்தலூரில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். 26.05.2022 அன்று நான் திருச்சியில் இருந்தேன். அப்போது எனது மாமனார் ஆரோக்கியசாமி இரவு 7.00 மணிக்கு எனக்கு தொடர்பு கொண்டு மாலை 5.00 மணியளவில் எனது கணவர் ஜூனியர் ராஜா என்பவர் தன்னுடைய Splender இருசக்கர வாகனத்தில் பெரியசாமி என்பவருடன் வேலை முடித்து விட்டு திருச்சி புறவழிசாலை ராஜா வித்தியா விகாஸ் பள்ளி அருகில் சென்று கொண்டிருந்த போது தேவக்கோட்டையில் இருந்து திருச்சி நோக்கி சென்ற கார் ஒன்று என்னுடைய கணவர் சென்றஇருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், இந்த விபத்தில் எனது கணவருக்கு தலை, வலது முழங்கால், வலது கை, தலை பின்புறம் ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டதாகவும், பெரியசாமி என்பவருக்கு தலையில் மற்றும் வலது கால் ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸில் காரைக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாக தெரிந்து கொண்டேன். அன்றைய தினம் இரவு 9.00 மணியளவில் எனது கணவர் மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டதாக கேள்விபட்டு தெரிந்து கொண்டேன்.

பின்னர் மேற்படி விபத்து ஏற்படுத்திய காரை ஓட்டியவர் சேலத்தை சேர்ந்த முரளி என்பவர் என்று தெரிந்து கொண்டேன். விபத்து சம்மந்தமாக சம்பவ சமயத்தில் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி விவரங்களை நான் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். மேற்படி சொன்ன விவரங்களை அனைத்தும் போலீசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்தை

ஏற்படுத்திய நபர் கொல்லிமலை கிராமத்தை சேர்ந்தவர் என்று போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்த எனது கணவர் ஜூனியர் ராஜாவுக்கு மது அருந்தும் பழக்கும் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. இருசக்கர வாகனத்தில் சென்ற 2 நபர்களும் மது அருந்தி வாகனம் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார்கள் என்ற விவரம் தெரிந்தும் தற்போது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.29 12:16:55 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# C.C. No.1569/2022 P.W.7

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | லூர்து ஆரோக்கிய அன்பு ராஜா | த-பெ | ஆரோக்கிய சாமி |
| ஊர்: | : | கூத்தலூர் | | |
| வயது: | : | 38/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கடை. | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **28.04.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் கூத்தலூரில் வசித்து கடை வைத்துள்ளேன். 26.05.2022 அன்று நான் தேவக்கோட்டையில் இருந்தேன். அப்போது எங்கள் ஊரை சேர்ந்த பஞ்சாயத்து தலைவர் எனக்கு தொடர்பு கொண்டு மாலை 5.00 மணியளவில் எனது தம்பி ஜூனியர் ராஜா என்பவர் தன்னுடைய Splender இருசக்கர வாகனத்தில் பெரியசாமி என்பவருடன் வேலை முடித்து விட்டு திருச்சி புறவழிசாலை ராஜா வித்தியா விகாஸ் பள்ளி அருகில் சென்று கொண்டிருந்த போது தேவக்கோட்டையில் இருந்து திருச்சி நோக்கி சென்ற கார் ஒன்று என்னுடைய தம்பி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், இந்த விபத்தில் எனது தம்பிக்கு தலை, வலது முழங்கால், வலது கை, தலை பின்புறம் ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டதாகவும், பெரியசாமி என்பவருக்கு தலையில் மற்றும் வலது கால் ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டு 108 ஆம்புலன்ஸில் காரைக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாக தெரிந்து கொண்டேன். மீண்டும் அன்றைய தினம் இரவு 9.00 மணியளவில் எனது தம்பி மேல் சிகிச்சைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸின் வாயிலாக அழைத்து செல்லப்பட்டார். நானும் உடன் சென்றிருந்தோம் அங்கு அவர் சிகிச்சை பலன் இன்றி இறந்து விட்டார்.

பின்னர் மேற்படி விபத்து ஏற்படுத்திய காரை ஓட்டியவர் சேலத்தை சேர்ந்த முரளி என்பவர் என்று தெரிந்து கொண்டேன். விபத்து சம்மந்தமாக சம்பவ சமயத்தில் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி விவரங்களை நான் சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். மேற்படி சொன்ன

விவரங்களை அனைத்தும் போலீசாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய நபர் கொல்லிமலை கிராமத்தை செர்ந்தவர் என்று போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் இறந்த எனது தம்பிக்கு ஜூனியர் ராஜாவுக்கு மது அருந்தும் பழக்கும் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. இருசக்கர வாகனத்தில் சென்ற 2 நபர்களும் மது அருந்தி வாகனம் ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார்கள் என்ற விவரம் தெரிந்தும் தற்போது நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.04.29 12:17:03 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.